**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2023 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை**

**வ.வி.எண்.4/2023 இன் அ.வ.எண்.128/2017**

1. ராஜேந்திரன்
2. கிருஷ்ணன்
3. சுப்பிரமணியன் ... மனுதாரர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகள்

/எதிர்/

1. பஞ்சவர்ணம்
2. லட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 11.10.2023 அன்று வந்தபோது மனுதாரர்கள்தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சோலைராஜ் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் எதிர்மனுதாரர்கள்தரப்பில் வழக்கறிஞர் திரு.பி. ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுவில் கண்ட ஆவணத்தை மனுதாரர்கள்தரப்பில் உரிய காலத்தில் தாக்கல் செய்யாத காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணத்தை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்து கொள்ள அனுமதி கோரி சிபிசி கட்டைள 8 விதி 3(ஏ)ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:–

அசல் வழக்கில் மனுதாரர்கள்தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாவா 3 வது லக்க சொத்தை மனுதாரர்களின் தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்ய விடுபட்டுவிட்டது. மேற்படி ஆவணத்தை தற்போதுதான் தேடி எடுத்துள்ளனர். மேற்படி ஆவணம் வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணமாகும். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்ய ஏற்கட்ட காலதாமதத்தை

மன்னித்து, மேற்படி ஆவணத்தை மனுதாரர்கள்தரப்பில் குறியீடு செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3 .<u>எதிர்மனுதாரர்கள்தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

மனுவில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப் படுகின்றன. மனுதாரர்கள் அசல் வழக்கினை வீணாக காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு இப்புரட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள். மறு திறப்பு பரிகாரம் கோரியும் ஆவணத்தை ஏற்க பரிகாரம் கோரியும் மனுத்தாக்கல் செய்துள்ளதில் மேற்படி ஆவணத்தை யார் மூலம் குறியீடு செய்வார்கள் என்ற எந்த ஒரு விளக்கத்தையும் தங்கள் மனுவில் மனுதாரர்கள் கூறவில்லை. மேலும் மனுதாரர் கூறும் ஆவணத்தை குறியீடு செய்வதற்கு என்று எந்த ஒரு சாட்சியையும் மீள் அழைக்கக்கோரி மீள் அழைப்பு மனு எதுவும் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

மனுதாரர்கள்தரப்பில், அசல் வழக்கில் மனுதாரர்கள்தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளதாகவும் இந்நிலையில் தாவா 3வது லக்க சொத்தை மனுதாரர்களின் தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்ய விடுபட்டுவிட்ட தாகவும் மேற்படி ஆவணத்தை தற்போதுதான் தேடி எடுத்துள்ளதாகவும் மேற்படி ஆவணம் வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணம் என்றும் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்ய ஏற்கட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணத்தை மனுதாரர்கள்தரப்பில் குறியீடு செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள்தரப்பில் மனுதாரர்கள் அசல் வழக்கினை வீணாக காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு இப்புரட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும் மறுதிறப்பு பரிகாரம் கோரியும் ஆவணத்தை ஏற்க பரிகாரம்

கோரியும் மனுத்தாக்கல் செய்துள்ளதில் மேற்படி ஆவணத்தை யார் மூலம் குறியீடு செய்வார்கள் என்ற எந்த ஒரு விளக்கத்தையும் தங்கள் மனுவில் மனுதாரர்கள் கூறவில்லை என்றும் மேலும் மனுதாரர் கூறும் ஆவணத்தை குறியீடு செய்வதற்கு என்று எந்த ஒரு சாட்சியையும் மீள் அழைக்கக் கோரி மீள் அழைப்பு மனு எதுவும் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் அசல் வழக்கினை வீணாக காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு இப்புரட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும் மறுதிறப்பு பரிகாரம் கோரியும் ஆவணத்தை ஏற்க பரிகாரம் கோரியும் மனுத்தாக்கல் செய்துள்ளதில் மேற்படி ஆவணத்தை யார் மூலம் குறியீடு செய்வார்கள் என்ற எந்த ஒரு விளக்கத்தையும் தங்கள் மனுவில் மனுதாரர்கள் கூறவில்லை என்றும் மேலும் மனுதாரர் கூறும் ஆவணத்தை குறியீடு செய்வதற்கு என்று எந்த ஒரு சாட்சியையும் மீள் அழைக்கக் கோரி மீள் அழைப்பு மனு எதுவும் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் கூறி மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும் எதிர்மனுதாரர்தரப்பு மறுப்புரையைப் பார்க்கும் போது, மனுதாரரின் மனுவினை மறுக்கும்வகையில் மேம்போக்காக மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் காணப்படுகிறதே தவிர இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனு– தாரர்களுக்கு எந்தவகையில் பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித கூற்றும் கூறப்படவில்லை. எதிர்மனுதாரர்தரப்பில் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு வேறு பாதிப்பு எதுவும் ஏற்பட்டு விடும் என்பதாகக் கூறி மனுதாரரின் மனுவினை அனுமதிப்பதற்கு வேறு கடுமையான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே மேற்கூறப்பட்ட காரணங் களின் அடிப்படையிலும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும் மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும்பொருட்டு, இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இருப்பினும் அசல் வழக்கானது 2017 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை முடிவுற்று, வாதுரைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மிகவும் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்துள்ளதை வைத்துப் பார்க்கும்போது, மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகையை செலுத்தும்பட்சத்தில் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று

இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. முடிவாக, மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ 500/—ஐ செலவுத் தொகையாக 31.10.2023 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 31.10.2023.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 18.10.2023 தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றவாணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:—</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.4/23 இன்
அ.வ.எண்.128/2017
உத்தரவு நாள் — 18.10.2023